# புதிய ரிமோட் கன்ட்ரோல் பேன் ஓரியன்ட் எலெக்ட்ரிக் அறிமுகம்

50 சதவீதம் மின்சாரத்தை சேமிக்கும் புதிய பிஎல்டிசி தொழில்நுட்ப ரிமோட் கன்ட்ரோல் பேனை ஓரியன்ட் எலெக்ட்ரிக் நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது.

சென்னையில் நேற்று நடந்த நிகழ்ச்சியில் இந்நிறுவனத்தின் சிஇஓ ராகேஷ் கண்ணா புதிய பேனை அறிமுகப்படுத்தி பேசியதாவது:

பிஎல்டிசி (பிரஷ்லெஸ் டிரெக்ட் கரன்ட் மோட்டார்) எனும் நவீன தொழில்நுட்ப மின் விசிறிகளை அறிமுகப்படுத்தி உள்ளோம். இந்தப் புது ரக மின் விசிறிகள் 50% மின்சாரத்தை சேமிப்பதுடன், குறைந்த மின் அழுத்தத்திலும் அதிக வேகத்துடன் சுழலும். வழக்கமான மின்விசிறிகள் இன்வர்ட்டரில் இயங்குவதைவிட இரு மடங்கு அதிக நேரம் சத்தமின்றி இயங்கும். மின் சிக்கனம், வேகம் மற்றும் டைமர் தொடர்பான விவரங்களைக் காட்டும் எல்சிடி இதில்
பொருத்தப்பட்டுள்ளது. எளிதான பயன்பாட்டுக்கு ரிமோட் வசதியும் உண்டு. வழக்கமான பேன்களின் மின் நுகர்வு 70 வாட்ஸ் ஆகும். ஆனால், ஓரியன்ட் பிஎல்டிசி பேனின் மின் நுகர்வு 32 வாட்ஸ் மட்டுமே. குறைந்த மின் நுகர்விலும் அதிக காற்றை வழங்கும் இந்த பேனின் விலை 4 ஆயிரத்து 800 ரூபாயாகும்.

பில்டிசி தொழில்நுட்பம் மூலம் நாட்டுக்கு ஒவ்வொரு ஆண்டும் 14 ஆயிரம் மெகாவாட் மின்சாரத்தை மிச்சம் ஏற்படுத்தலாம். இவ்வாறு அவர் கூறினார்.